# 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 7/2001)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Farmer's Management of Irrigation Systems Act, 2000

## (Tamil Nadu Act No.7 of 2001)

(as on 31st October, 2023)


தமிழாக்கம் :

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

# 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டம்
## (தமிழ்நாடு சட்ட எண் 7/2001)

பிரிவு பொருளடக்கம்


### அத்தியாயம் I
### முன்னுரை

1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.
2. பொருள்வரையறைகள்.

### அத்தியாயம் II
### குடியானவர் அமைப்புகள்

3. நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் பரப்பிடத்தை வரையறுத்தல்.
4. நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தை அமைத்தல்.
5. நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் மேலாண்மைக் குழுவை அமைத்தல் மற்றும் அதன் தலைவரையும், உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்தல்.
6. பகிர்மானக் குழுப் பரப்பிடத்தை வரையறுத்தல்.
7. பகிர்மானக் குழுவை அமைத்தல்.
8. பகிர்மானக் குழுவிற்கான மேலாண்மைக் குழுவை அமைத்து, அதன் தலைவரையும், உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்தல்.
9. திட்டப் பரப்பிடத்தை வரையறுத்தல்.
10. திட்டக் குழுவை அமைத்தல்.
11. திட்டக் குழுவிற்கான மேலாண்மைக் குழுவை அமைத்து உருவாக்குதலும் அதன் தலைவர் மற்றும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும்.

12. உச்சநிலைக் குழுவை அமைத்தல்.

13. நீக்க உத்தரவை திரும்பப் பெறுவதற்கான நடைமுறை.

14. குடியானவர்கள் அமைப்பில் துணைக் குழுக்களை அமைத்தல் .

15. குடியானவர்கள் அமைப்பு ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும்.

16. குடியானவர்களின் அமைப்பில் மாறுதல்கள்.

17. வேட்பாளர்கள் அல்லது உறுப்பினர்களின் தகுதியின்மை.

18. பதவி விலகல்.

19. காலியிடங்களை நிரப்புதல்.

20. காலியிடம் முதலியவற்றினால் செயல்கள் செல்லத்தகாதவை ஆகுதல் கூடாது.

21. கூட்டங்கள்.

## அத்தியாயம் III

## குடியானவர்கள் அமைப்பின் அலுவல்கள்

22. நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் அலுவல்கள்.

23. பகிர்மானக் குழுவின் அலுவல்கள்.

24. திட்டக் குழுவின் அலுவல்கள்.

25. கட்டணங்களை விதிப்பதற்கும், வசூலிப்பதற்கும் அதிகாரம்.

26. தகுதிவாய்ந்த அலுவலரை நியமித்தலும் அவரது அலுவல்களும்.

## அத்தியாயம் IV

## குடியானவர்கள் அமைப்பின் நிதி

27. குடியானவர்கள் அமைப்பின் நிதி.

28. நிதியில் வைப்பீடு செய்தலும் அதனை நிருவாகம் செய்தலும்.

29. கடன்தீர் நிதி.

30. தணிக்கை.

31. வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.

## அத்தியாயம் V

## குற்றச்செயல்களும் பணத்தண்டங்களும்

32. குற்றச்செயல்களும், பணத்தண்டங்களும்.

33. குற்றச்செயல்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.

34. வேறு சட்டங்களின்படியான தண்டனைக்குத் தடை இல்லை.

35. குற்றச்செயல்களை இணக்கமாகத் தீர்த்தல்.

## அத்தியாயம் VI

## பூசல்களைத் தீர்வு செய்தல்

36. பூசல்களைத் தீர்வு செய்தல்.

37. மேல்முறையீடுகள்.

## அத்தியாயம் VII

## பல்வகை

38. பதிவுருக்கள்.

39. குடியானவர்கள் சங்கத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய பணத்தை நில வருவாய் நிலுவையைப் போன்றே வசூலித்தல்.

40. கூட்டங்கள்.

41. ஆணையரின் நியமனம்.

42. ஏற்கனவே அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட குடியானவர்கள் சங்கங்களை இணைத்தலும், இடைக்கால மாற்று ஏற்பாடுகளும்.

43. குடியானவர்கள் சங்கத்தின் ஆணைகளுக்கும், ஆவணங்களுக்கும் உறுதிச்சான்று அளித்தல்.

44. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

45. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

46. ஆணைகளைப் பிறப்பிப்பதற்கான அரசின் அதிகாரம்.

47. ஆணையரால் செய்யப்படும் மேலாய்வு.

48. மற்றச் சட்டங்களின் செயற்பாடு பாதிக்கப்படுதல் கூடாது.

49. காப்புரை·

50. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

# 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டம்
# தமிழ்நாடு சட்ட எண் 7/2001

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2001ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25ஆம் நாளன்று குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத்தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

**நீர்ப்பாசன அமைப்புமுறையின் மேலாண்மையில் குடியானவர்கள் பங்கேற்பதற்கும், அது தொடர்பானவைகளுக்கு அல்லது அதன் இடைவிளைவானவைகளுக்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.**

வேளாண் உற்பத்தியை மேம்படுத்துவதற்காகத் தேசிய சொத்தான நீர்வளத்தை நலன் தரத்தக்க வகையில் பயன்படுத்திக் கொள்வதை உறுதிசெய்கின்ற வகையில், திறமையாகவும் சரிசமமாகவும் நீர் வழங்கப்படுவதையும் பகிர்ந்தளிக்கப்படுவதையும் சார்ந்திருக்கின்றதாலும் தமிழ்நாடு மாநிலம் முக்கியமாக ஒரு வேளாண் மாநிலமாக இருப்பதாலும்;

நீர் வழங்கப்படுவதற்கான திட்டத்திற்கும், அதன் செயல்முறை ஏற்பாட்டிற்கும் இணங்க, நீர்ப்பாசன அமைப்புமுறையில் குடியானவர்களை ஈடுபடச் செய்வதன் மூலமாகவும் அவர்களிடையே அதற்கான உரிமையுணர்வை ஏற்படுத்துவதன் மூலமாகவும், பயன்படுத்துபவர்களிடையே தண்ணீரானது பகிர்ந்தளிக்கப்படுவதை, நீர்ப்பாசன அமைப்புமுறை போதுமான அளவு பேணிவரப்படுவதை, வேளாண் உற்பத்திக்கு பயன்படத்தக்க வகையில் நீரைப் திறமையாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்திக் கொள்வதை மேம்படுத்திப் பாதுகாப்பது இன்றியமையாததாக இருப்பதாலும்;

நீர்ப்பாசன வசதிகளுக்கான அறிவியல் சார்ந்த மற்றும் முறையான வளர்ச்சியும் பராமரிப்பும் (விவசாயிகள் சங்கங்களின்) குடியானவர் அமைப்புகளின் மூலமாக மட்டுமே சிறப்பாக இருக்க முடியும் எனக் கருதுவதாலும்;

பயனுள்ள மற்றும் நம்பகமான தண்ணீர் வழங்குதல் மற்றும் பங்கீடு செய்தலுக்கு (விவசாயிகள் சங்கங்களுக்கு) குடியானவர் அமைப்புகளுக்கு நீர்ப்பாசன முறை மேலாண்மை மற்றும் பராமரிப்பில் பயனுள்ள பங்கு அளிக்க வேண்டியது இருப்பதாலும்,

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:-

## அத்தியாயம் I

## முன்னுரை

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்**.– (1) இந்தச் சட்டம் 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு அறிவிக்கையின் மூலமாகக் குறிப்பிடக்கூடிய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்; மேலும் வெவ்வேறு பகுதிகளுக்காகவும் வெவ்வேறு வகைமுறைகளுக்காகவும் வெவ்வேறு தேதிகள் குறிப்பிடப்படலாம்.

**2. பொருள்வரையறைகள்**.– இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

(a) "உச்சநிலைக் குழு" என்பது, பிரிவு 12இன்படி அமைத்துருவாக்கப்பட்டுள்ள உச்சநிலைக் குழு எனப் பொருள்படும்;

(b) குடியானவர்களின் அமைப்பு தொடர்பான "செயற்பாட்டுப் பரப்பிடம்" என்பது, இதன் பொருட்டு அறிவிக்கையின் மூலமாக அரசு குறிப்பிடக்கூடிய பாசனப் பரப்பிடத்திற்குள் உள்ள தொடர்ச்சியான ஒரு நிலத்தொகுதி எனப் பொருள்படும்;

(c) "ஆயக்கட்டுச் சாலை" என்பது, செயற்பாட்டுப் பரப்பிற்குள் உள்ள ஒரு சாலை எனப் பொருள்படும்; ஆனால் ஒரு கிராம, ஊராட்சி ஒன்றிய, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி, நெடுஞ்சாலை ஆகியவற்றின் உரிமையில் உள்ள சாலை எதையும் உள்ளடக்காது;

(d) "கால்வாய் அமைப்பு" என்பது,–

(i) நீர்ப்பாசனத்திற்காக நீர் வழங்கப்படுவதற்காகவும் விநியோகிக்கப் படுவதற்காகவும் அமைக்கப்பட்டுள்ள முதன்மைக் கால்வாய்கள், கிளைக் கால்வாய்கள், பகிர்மானக் கால்வாய்கள் மற்றும் நீரோடைகள் என்றும்;

(ii) நீர்ப்பாசனத்திற்காக நீர் விநியோகிக்கப்படுவதுடன் தொடர்புடைய பணியமைப்புகள், கட்டுமானங்கள் மற்றும் சாதனங்கள் அனைத்தும் என்றும்;

(iii) நீர்ப்பாசன மதகு அமைப்பு ஒன்றின் கீழ் உள்ள நிலக் கால்வாய்கள் மற்றும் தொடர்புடைய வேறு கால்வாய்கள் மற்றும் கட்டுமானங்கள் அனைத்தும் என்றும்

பொருள்படும்.

(e) "ஆட்சியர்" என்பது, நீர்ப்பாசன அமைப்பு அமைந்துள்ள ஒரு மாவட்டத்தின் ஆட்சியர் என்று பொருள்படுவதோடு, இந்தச் சட்டத்தின்கீழ் ஆட்சியருக்குள்ள அலுவல்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் ஏதொன்றையும் ஆற்றிவரும் பொருட்டு அரசினால் இதற்கெனத் தனியாக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர் எவரையும் உள்ளடக்கும்;

(f) "பாசனப்பரப்பிடம்" என்பது, புவிஈர்ப்பு விசையின் மூலமாகவோ அல்லது நீரேற்றுப் பாசனத்தின் மூலமாகவோ அல்லது அரசினர் வழி வகையிலிருந்த வேறு முறை நீர்ப்பாசன அமைப்பு எதன்படியும் நீர்ப்பாசனம் செய்யப்படும் அல்லது நீர்ப்பாசனம் செய்யப்படுவதற்குத் தகுந்ததான ஒரு பரப்பிடம் எனப் பொருள்படும்; மற்றும் அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதன்படியும், 'ஆயக்கட்டு' என்று அழைக்கப்பட்டாலும் அல்லது வேறு எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும் அந்தப் பரப்பிடம் ஒவ்வொன்றையும் உள்ளடக்கும்;

(g) "தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு" என்பது, பிரிவு 26இன்படி நியமிக்கப்பட்டுள்ள அதிகாரஅமைப்பு எனப் பொருள்படும்;

(h) நீர்ப்பாசன அமைப்பு ஒன்று தொடர்பான வடிகால் அமைப்பு என்பது,–

(i) வடிநீரோ, உபரிநீரோ வடிந்து செல்வதற்காக இயற்கையாகவோ செயற்கையாகவோ உள்ள கால்வாய்களையும் அது தொடர்பான அல்லது அதற்குத் துணையாக உள்ள அனைத்துக் கட்டுமானங்களையும் உள்ளடக்கும்;

(ii) நீர்ப்பாசன அமைப்பு அல்லது கால்வாய் அமைப்பு மற்றும் அது தொடர்பான பிற கட்டுமானங்களில் உள்ள கசிவு நீர்க் கால்வாய்களை உள்ளடக்கும்; ஆனால் கழிவு நீர் அகற்றுவதற்கான கட்டுமானங்களை உள்ளடக்காது;

(iii) நிலத்து வடிகால்களிலிருந்து உபரி நீரானது வடிவதற்காக உள்ள சேகரிப்பு வடிகால்கள் மற்றும் முதன்மை வடிகால்கள் அனைத்தையும் உள்ளடக்கும்; மற்றும்

(iv) நீர்ப்பாசன மதகு அமைப்பு ஒன்றின் கீழ் உள்ள நிலத்து வடிகால்கள் மற்றும் தொடர்புடைய கட்டுமானங்கள் அனைத்தையும் உள்ளடக்கும்.

(i) "குடியானவர் அமைப்பு" என்பது,–

(i) தொடக்க நிலையில் பிரிவு 4இன்படி அமைத்துருவாக்கப்பட்ட நீரைப் பயன்படுத்துபவர் அனைவரையும் கொண்டிருக்கின்ற 'தண்ணீர் பயன்படுத்துவோர் சங்கம்' என்றும்; அல்லது

(ii) இரண்டாம் நிலையில் பிரிவு 7இன்படி அமைத்துருவாக்கப்பட்ட 'பகிர்மானக் குழு' என்றும்; அல்லது

(iii) திட்ட நிலையில் பிரிவு 10இன்படி அமைத்துருவாக்கப்பட்ட 'திட்டக் குழு' என்றும்,

பொருள்படும்;

(j) "நிலக் கால்வாய்" என்பது, மதகு அமைப்பு ஒன்றிலிருந்து வருகின்ற நீரைப் பெற்று விநியோகிப்பதற்கானதும், தற்போது இருக்கின்ற அல்லது அரசாலோ, நீரைப் பயன்படுத்துபவர்களாலோ, வேறு முகவாண்மை அமைப்பு எதனாலுமோ இனி கட்டப்பட இருக்கின்றதுமான கால்வாய் ஒன்றை உள்ளடக்கும்;

(k) "நில வடிகால்" என்பது, மதகு அமைப்பு ஒன்றின் கீழ் உடைமை நிலத்திலிருந்து கழிவு நீரையோ, உபரிநீரையோ வெளியேற்றும் பொருட்டு நீர் பயன்படுத்துபவர்களாலோ அல்லது வேறு முகவாண்மை அமைப்பு எதனாலுமோ தோண்டப்பட்டதும், பேணி வரப்படுவதுமான கால்வாய் ஒன்றை உள்ளடக்கும்; மேலும் அது தற்போது இருக்கின்ற அல்லது இனி கட்டப்பட இருக்கின்ற வடிகால்கள், கசிவு நீர்க் கால்வாய்கள் மற்றும் அது போன்ற கட்டுமானங்களையும் உள்ளடக்கும்;

(l) "நிதி முகவாண்மை அமைப்பு" என்பது, குடியானவர் அமைப்பின் செயற்பாட்டுப் பரப்பிடத்தை மேம்படுத்துவதற்காகப் பணம் கடன் கொடுக்கின்ற வணிகத்தொழில் வங்கி அல்லது கூட்டுறவுச் சங்கம் எதுவும் என்றோ அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதன்படியும் நிறுவப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட பிற வங்கி அல்லது அமைப்பு எதுவும் என்றோ பொருள்படும்;

(m) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(n) "அரசு வழிவகை" என்பது, நீர்வள ஆதார அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் நீரைப் பெறுவதற்கான வழிவகை எதுவும் எனப் பொருள்படும்;

(o) "நீரழுத்த அடிப்படைக்கூறு" என்பது, தலைக்கட்டுமானம், முதன்மைக் கால்வாய், கிளைக் கால்வாய்கள், பகிர்மானக் கால்வாய்கள், மதகு அமைப்புகள்

மற்றும் அவை போன்ற நீரழுத்த கட்டுமானங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கட்டுமானங்களைப் பயன்படுத்தும் நீர்ப்பாசனத்திற்கு உகந்த பரப்பிடங்களை அடையாளம் காண்பதற்கான அடிப்படைக்கூறு எனப் பொருள்படும்;

(p) "நீர்ப்பாசன அமைப்பு" என்பது, அரசு வழிவகைகளிலிருந்து நீர்ப்பாசனத்திற்காகவும் அதைச் சார்ந்த பயன்பாடுகளுக்காகவும் நீரைப் பயன்படுத்திக் கொள்வதற்காக உள்ள பெரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசன அமைப்பு எனப் பொருள்படும்; மேலும் அது நீர்த் தேக்கங்கள், திறந்த வெளிக் கால்வாய்கள், மாற்று வழி அமைப்புகள், நீரேற்றுப் பாசனத் திட்டங்கள், அணைக்கட்டுகள், குளங்கள், கிணறுகள் மற்றும் அவை போன்றவற்றை உள்ளடக்கும்;

**விளக்கம்:–** இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக,–

(i) "பெரிய நீர்ப்பாசன அமைப்பு" என்பது, 10000 ஹெக்டேர்களுக்கும் அதிகமாக நீர்ப்பாசனம் செய்யத்தக்க பாசனப் பரப்பிடத்தைக் கொண்ட நீர்ப்பாசனத் திட்டத்தின்படியான பெரிய நீர்ப்பாசன அமைப்பு எனப் பொருள்படும்.

(ii) "நடுத்தர நீர்ப்பாசன அமைப்பு" என்பது, 2000 ஹெக்டேர்களுக்கு மேல் 10000 ஹெக்டேர்கள் வரை நீர்ப்பாசனம் செய்யத்தக்க பாசனப் பரப்பிடத்தைக் கொண்ட நடுத்தர நீர்ப்பாசனத் திட்டத்தின்படியான நீர்ப்பாசன அமைப்பு எனப் பொருள்படும்.

(iii) "சிறிய நீர்ப்பாசன அமைப்பு" என்பது, 2000 ஹெக்டேர்கள் வரை நீர்ப்பாசனம் செய்யத்தக்க பாசனப் பரப்பிடத்தைக்

கொண்ட சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்படியான நீர்ப்பாசன அமைப்பு எனப் பொருள்படும்.

(q) "நிலம்" என்பது, ஏதேனும் நீர்ப்பாசன அமைப்பு ஒன்றின் பதிவு பெற்ற ஆயக்கட்டு எதன்படியுமான நிலம் எதுவும் எனப் பொருள்படும்;

(r) "பேணுகை" என்பது, தர அளவு வைத்து வடிவமைக்கப்பட்ட இந்தச் செயல்முறையானது, நீரை நிலங்களுக்கு உரியவாறு பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதி செய்யும்பொருட்டு, இந்த நீர்ப்பாசன அமைப்பில் தேவையானப் பணிகளை நிறைவேற்றுதல் எனப் பொருள்படும்;

(s) "மேலாண்மைக் குழு" என்பது, குடியானவர் அமைப்பு ஒன்றின் மேலாண்மைக் குழு எனப் பொருள்படும்;

(t) "செயற்பாட்டுத் திட்டம்" என்பது, பாசனப் பரப்பிடம் எதிலும் நீர்ப்பாசனத்தை முறைப்படுத்துவதற்கான பகிர்மானமுறை மற்றும் காலஅளவு பற்றிய விவரங்களுடனான நீரின் வெளியேற்றப் பட்டியல் எனப் பொருள்படும்;

(u) "சுழற்சிமுறை பகிர்மானம்" என்பது, நீர் வழங்கப்படுகின்ற நாள், காலஅளவு, நேரம் ஆகியவற்றினைக் குறிப்பிட்டுக் காட்டுகின்ற ஒப்புதல் அளிக்கப்பட்ட அட்டவணை ஒன்றுக்கு இணங்க நீரைப் பயன்படுத்துபவர்களுக்கு சுழற்சி முறையில் நீரானது ஒதுக்கிப் பகிர்ந்தளிக்கப்படுகின்ற ஒரு முறை எனப் பொருள்படும்.

(v) "ஆட்சி மண்டலத் தொகுதி" என்பது, தண்ணீர் பயன்படுத்துவோர் சங்கத்தின் பரப்பிடம் ஒன்றின் கீழ் உள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மதகு

அமைப்புகளையுடைய பாசனப் பரப்பிடம் ஒன்றின் தொடர்ச்சியான ஒரு தொகுதி எனப் பொருள்படும்;

(w) நீர்ப்பாசன அமைப்பு ஒன்றின் தொடர்பான 'நீர் ஒதுக்கீடு' என்பது, குடியானவர் அமைப்பு ஒன்றினால் அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தில் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் நீர்ப்பங்கீடு எனப் பொருள்படும்;

(x) "நீர்வள ஆதார அமைப்பு" என்பது, அரசின் பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பு எனப் பொருள்படும்;

(y) "நீரைப் பயன்படுத்துபவர்" என்பது, நிலம் ஏதொன்றையும் பொறுத்த அளவில், வருவாய்ப் பதிவேடுகளில் உரிமையாளராகவோ அல்லது குத்தகைதாரராகவோ பதிவு செய்யப்பட்டிருந்து, நிலத்தை உடைமையில் வைத்து வருகின்ற குடியானவர் எவரும் என்று பொருள்படும்; மேலும் அது அரசு வழிவகைகளிலிருந்து வேளாண்மைக்காக நீரைப் பயன்படுத்துகின்ற வேறு தனிநபர் எவரையுமோ அல்லது சங்கம் ஒன்றையோ உள்ளடக்கும்.

## அத்தியாயம் II

## குடியானவர் அமைப்புகள்

**3. நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் பரப்பிடத்தை வரையறுத்தல்.–** (1) ஆட்சியர், வகுத்துரைக்கப்படும் முறையில், நிர்வாக அளவில் உருப்பெறக்கூடிய கால்வாய் நீருக்கான கட்டுமானங்களின் அடிப்படையிலான நீர்ப்பாசன அமைப்பு ஒவ்வொன்றின்படியும் பாசனப் பரப்பிடத்தை வரையறுக்கபடலாம் என்பதோடு இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக நீர் பயன்படுத்துவோர் சங்கத்தின் பரப்பிடம் ஒன்றாக அதனை விளம்பலாம்:

**வரம்புரை:** சிறிய நீர்ப்பாசன அமைப்பின் படியான பாசனப் பரப்பிடத்தைப் பொறுத்த அளவில், அப்பாசன

பரப்பிடம் முழுவதும் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு ஒருமுறை மட்டுமே நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் பரப்பிடம் ஒன்றாக அமையலாம்.

(2) நீர் பயன்படுத்துவோர் சங்கம் ஒவ்வொன்றும், நான்கிற்குக் குறையாத ஆனால், பத்திற்கு மேற்படாத, வகுத்துரைக்கப்படும் ஆட்சி மண்டலத் தொகுதிகளாகப் பிரிக்கப்படுதல் வேண்டும்.

**4. நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தை அமைத்தல் .–** (1) பிரிவு 3இன்படி வரையறுக்கப்பட்டுள்ள நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் பரப்பிடம் ஒவ்வொன்றுக்காகவும், அதன் தனிப்பட்ட வட்டாரப் பெயரினால் அழைக்கப்படும் நீரைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) நீரைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒவ்வொன்றும், அத்தகைய நீரைப் பயன்படுத்துவோர் சங்க பரப்பிடத்திலுள்ள நீர் பயன்படுத்துவோர்கள் அனைவரையும் உறுப்பினர்களாகக் கொண்டிருத்தல் வேண்டும்:

**வரம்புரை:** நிலம் ஏதொன்றையும் சட்டப்படி தன்வசம் வைத்திருக்கிற மற்றும் அதனை அனுபவித்து வருகிற நபர் எவரும், சாகுபடி ஆண்டு ஒன்றில் அவ்வாறு தன் வசம் வைத்து வருவதையும், அனுபவித்து வருவதையும் மெய்ப்பிப்பதன் பேரில், அவர் ஒரு பதிவு பெற்ற நிலக்கிழாராக இருந்தாலும் சரி அல்லது அவ்வாறு இல்லை என்றாலும் சரி, உறுப்பினர் என்கிற தகுதியைக் கோரலாம்; நீரைப் பயன்படுத்துவோர் சங்கம், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, அத்தகைய நபருக்கு உறுப்பினர் தகுதியை மறுத்தல் கூடாது; மற்றும் அத்தகைய நபர் நீரைப் பயன்படுத்துகின்ற ஒருவராக இருப்பது போன்றே கட்டணங்களைச் செலுத்துவதற்கு உள்ளாதலும் வேண்டும்:

**மேலும் வரம்புரை:** நீரைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒன்றின், ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்சி மண்டலத் தொகுதியின் உறுப்பினராக ஆவதற்குத் தகுதி உடையவராக இருக்கிற நபர் எவரும், தமது விருப்பத் தெரிவின்படி ஏதாவது ஓர் ஆட்சி மண்டலத் தொகுதியில் உறுப்பினராக இருப்பதற்குத் தகுதி உடையவராவர்.

(3). உட்பிரிவு (2)இல் குறித்துரைக்கப்படும் உறுப்பினர்கள் அந்தந்த நீர் பயன்படுத்துவோர் சங்கத்திற்கான பொதுக் குழுவினை அமைத்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய உறுப்பினர்கள் மட்டுமே வாக்களிப்பதற்கான உரிமையைப் பெற்றவர்களாவர்.

**5. நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் மேலாண்மைக் குழுவை அமைத்தல் மற்றும் தலைவரையும் உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்தல்.**– (1) நீரைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒவ்வொன்றிற்காகவும் ஒரு மேலாண்மைக் குழு இருத்தல் வேண்டும்.

(2) ஆட்சியர், நீரைப் பயன்படுத்துவோர் சங்க உறுப்பினர்களிடையே இருந்து நேரடித் தேர்தல் மூலம் மறைவான வாக்கெடுப்பு முறையில், அதன் மேலாண்மைக் குழுவிற்கான தலைவரை வகுத்துரைக்கப்படும் முறையில் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(3) ஆட்சியர், நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் பரப்பிடத்தின் ஆட்சி மண்டலத் தொகுதி ஒவ்வொன்றில் இருந்தும், ஓர் உறுப்பினரைக் கொண்டிருக்கின்ற மேலாண்மைக் குழு உறுப்பினர்களை மறைவான வாக்கெடுப்பு வாயிலாக வகுத்துரைக்கப்படும் முறையில் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(4). உட்பிரிவுகள் (2) அல்லது (3)இன்படி நடத்தப்பட்ட தேர்தல் ஒன்றில் ஆட்சி மண்டலத் தொகுதியின் தலைவரோ, உறுப்பினரோ தேர்ந்தெடுக்கப் படவில்லையானால், உட்பிரிவுகள் (2) அல்லது (3)இல்

குறிப்பிடப்பட்டுள்ள முறையில் புதிய தேர்தல் நடத்தப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** அரசு அவ்வப்போது தேர்தலை ஒத்திப் போடலாம்; ஆனால் அதற்கான காரணங்களை எழுத்து வடிவில் பதிவு செய்தல் வேண்டும்.

(5) மேலாண்மைக் குழுவின் தலைவரும், உறுப்பினர்களும் பிரிவு 13இன்படி திரும்ப அழைக்கப்படவில்லையானால், மேலாண்மைக் குழுவின் முதலாம் கூட்டத் தேதியில் இருந்து ஐந்தாண்டு காலஅளவிற்குப் பதவியில் இருத்தல் வேண்டும்.

(6) மேலாண்மைக் குழுவானது நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் அதிகாரங்களைச் செலுத்தி வருதலும் அலுவல்களை ஆற்றி வருதலும் வேண்டும்.

**6. பகிர்மானக் குழுப் பரப்பிடத்தை வரையறுத்தல்.–** நீரைப் பயன்படுத்துவோர் சங்கங்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவற்றைக் கொண்டிருக்கின்ற, பெரிய நீர்ப்பாசன அமைப்பு ஒவ்வொன்றின் பாசனப் பரப்பிடம் ஒவ்வொன்றையும், அரசு வகுத்துரைக்கப்படும் முறையில் வரையறுக்கபடலாம் என்பதோடு, அதனை இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பகிர்மானக் குழுப் பரப்பிடம் ஒன்றாக விளம்பலாம்.

**7. பகிர்மானக் குழுவை அமைத்தல்.–** (1) பிரிவு 6இன்படி பகிர்மானக் குழுப் பரப்பிடம் ஒன்றாக விளம்பப்பட்டுள்ள அத்தகைய பரப்பிடம் ஒவ்வொன்றுக்காகவும், அதன் தனிப்பட்ட வட்டாரப் பெயரில் அழைக்கப்படுகின்ற பகிர்மானக் குழு ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) பகிர்மானக் குழுப் பரப்பிடம் ஒன்றில் நீரைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒவ்வொன்றின் தலைவரும், அத்தகைய பகிர்மானக் குழுவின் பதவிவழி உறுப்பினர்

ஆவார்; மற்றும் அத்தகைய உறுப்பினர்கள் அனைவரும் அத்தகைய பகிர்மானக் குழுவின் பொதுக் குழுவாக இருப்பார்கள்.

**8. பகிர்மானக் குழுவிற்கான மேலாண்மைக் குழுவை அமைத்து, அதன் தலைவரையும் உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்தல்.–** (1) பகிர்மானக் குழு ஒவ்வொன்றிற்காகவும் ஒரு மேலாண்மைக் குழு இருத்தல் வேண்டும்.

(2) ஆட்சியர், பகிர்மானக் குழு உறுப்பினர்களிடையே இருந்து நேரடித் தேர்தல் மூலம் மறைவான வாக்கெடுப்பு மூலமாக அதன் மேலாண்மைக் குழுவிற்கான தலைவரை வகுத்துரைக்கப்படும் முறையில் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(3) ஆட்சியர், பகிர்மானக் குழுவின் உறுப்பினர் களிடையே இருந்து, ஐவருக்கும் மிகாத மேலாண்மைக் குழு உறுப்பினர்களை வகுத்துரைக்கப்படும் முறையில் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்:

**வரம்புரை:** அரசு அவ்வப்போது தேர்தலை ஒத்திப் போடலாம்; ஆனால் அதற்கான காரணங்களை எழுத்து வடிவில் பதிவு செய்தல் வேண்டும்.

(4). உட்பிரிவுகள் (2) அல்லது (3)இன்படி நடத்தப்பட்ட தேர்தல் ஒன்றில் மேலாண்மைக் குழுவின் தலைவரோ, உறுப்பினரோ தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றால் உட்பிரிவுகள் (2) அல்லது (3)இன்படி குறிப்பிடப்பட்ட முறையில் புதிய தேர்தல் நடத்தப்படுதல் வேண்டும்.

(5) மேலாண்மைக் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலஅளவு பிரிவு 13இன்படி நீக்க உத்தரவு திரும்ப பெறப்படவில்லையானால், பிரிவு 7இன் உட்பிரிவு (2)இல் குறிப்பிடப்பட்ட பொதுக்

குழு உறுப்பினர்களின் பதவிக் காலஅளவுடன் ஒருசேர முடிவடைவதாக இருத்தல் வேண்டும்.

(6) மேலாண்மைக் குழு, பகிர்மானக் குழுவின் அதிகாரங்களைச் செலுத்தி வருதலும் அலுவல்களை ஆற்றி வருதலும் வேண்டும்.

**9. திட்டப் பரப்பிடத்தை வரையறுத்தல்.**– அரசு, வகுத்துரைக்கப்படும் முறையில் பெரிய நீர்ப்பாசன அமைப்பு ஒன்றின் பாசனப் பரப்பிடம் ஒவ்வொன்றையும் அல்லது அதன் பகுதி ஒவ்வொன்றையும், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காகத் திட்டப் பரப்பிடம் ஒன்றாக விளம்பலாம்.

**10. திட்டக் குழுவை அமைத்தல்.**– (1) பிரிவு 9இன்படி விளம்பப்பட்டுள்ள திட்டப் பரப்பிடம் ஒவ்வொன்றிற்காகவும், அதன் தனிப்பட்ட வட்டாரப் பெயரில் அழைக்கப்படும் திட்டக் குழு ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) திட்டப் பரப்பிடத்தில் உள்ள பகிர்மானக் குழு ஒவ்வொன்றின் தலைவரும், அத்தகைய திட்டக் குழுவின் பதவிவழி உறுப்பினர்கள் ஆவர் என்பதோடு அத்தகைய உறுப்பினர்கள் அனைவரும் அத்தகைய திட்டக் குழுவிற்கான பொதுக்குழுவினை அமைத்தல் வேண்டும்.

**11. திட்டக் குழுவிற்கான மேலாண்மைக் குழுவை அமைத்து உருவாக்குதலும் அதன் தலைவர் மற்றும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும்.**– (1) திட்டக்குழு ஒவ்வொன்றுக்காகவும் ஒரு மேலாண்மைக் குழு இருத்தல் வேண்டும்.

(2) ஆட்சியர், திட்டக் குழுவின் உறுப்பினர்களுக் கிடையே இருந்து நேரடித் தேர்தல் மூலம், மறைவான வாக்கெடுப்பின் வாயிலாக அதன் மேலாண்மைக் குழுவின்

தலைவரை வகுத்துரைக்கப்படும் முறையில் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(3) ஆட்சியர், திட்டக் குழு உறுப்பினர்களுக்கிடையே இருந்து, ஒன்பது நபர்களுக்கு மேற்படாத உறுப்பினர்களை திட்டக் குழுவிற்கான மேலாண்மைக் குழுவில் வகுத்துரைக்கப்படும் முறையில் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்:

**வரம்புரை:** அரசு அவ்வப்போது தேர்தலை ஒத்திப் போடலாம். ஆனால் அதற்கான காரணங்களை எழுத்து வடிவில் பதிவு செய்தல் வேண்டும்.

(4). உட்பிரிவுகள் (2) அல்லது (3)இன்படி நடத்தப்பட்ட தேர்தல் ஒன்றில், அந்த மேலாண்மைக் குழுவின் தலைவரோ உறுப்பினர்களோ தேர்ந்தெடுக்கப்படவில்லையானால், உட்பிரிவுகள் (2) அல்லது (3)இல் குறிப்பிடப்பட்ட அதே முறையில் புதிய தேர்தல் நடத்தப்படுதல் வேண்டும்.

(5) மேலாண்மைக் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலஅளவு பிரிவு 13இன்படி நீக்க உத்தரவு திரும்ப பெறப்படவில்லையானால், பிரிவு 10இன் உட்பிரிவு (2)இல் குறிப்பிடப்பட்ட பொதுக் குழு உறுப்பினர்களின் பதவிக் காலஅளவுடன் ஒருசேர முடிவடைவதாக இருத்தல் வேண்டும்.

(6) மேலாண்மைக் குழு, திட்டக் குழுவின் அதிகாரங்களைச் செலுத்தி வருதலும், அலுவல்களை ஆற்றி வருதலும் வேண்டும்.

**12. உச்சநிலைக் குழுவை அமைத்தல்.–** (1) அரசு, அறிவிக்கையின் மூலமாகத் தலைவரையும் வகுத்துரைக்கப்படும் எண்ணிக்கையிலான உறுப்பினர்களையும் கொண்ட உச்சநிலைக் குழு ஒன்றை அமைத்துருவாக்கலாம்.

(2). உட்பிரிவு (1)இன்படி அமைத்து உருவாக்கப்பட்டுள்ள உச்சநிலைக் குழுவானது, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நடைமுறைப் படுத்துவதற்கான கொள்கைகளையும், வழிகாட்டு நெறிகளையும் வகுத்துரைக்கப்படும் அதிகாரங்களையும் செலுத்தி வரலாம் மற்றும் அலுவல்களை ஆற்றி வரலாம்.

**13. நீக்க உத்தரவை திரும்பப் பெறுவதற்கான நடைமுறை.–** (1) குடியானவர் அமைப்பு ஒன்றின் தலைவர் அல்லது குழு தலைவர் அல்லது உறுப்பினர் ஒருவரின் நீக்க உத்தரவை திரும்ப பெறுவதற்கான தீர்மானம் ஒன்று, வாக்களிப்பதற்கு உரிமையுடைய குடியானவர் அமைப்பின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாதவர்களால் கையொப்பமிடப்பட்டு எழுத்து வடிவில் வகுத்துரைக்கப்படும் படிவத்தில் அறிவிப்பு ஒன்றைக் கொடுப்பதன் மூலமாகச் செய்யப்படலாம்:

**வரம்புரை:** எந்த நபருக்கு எதிராக அந்தத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறதோ அந்த நபர் எவரும், பதவியை ஏற்றுக்கொண்டத் தேதியிலிருந்து ஓராண்டிற்குள், இந்தப் பிரிவின்படியான தீர்மானம் குறித்த அறிவிப்பு எதையும் செய்தல் கூடாது.

(2) சிறப்பாக இந்த நோக்கத்திற்கு எனக் கூட்டப்பட்டுள்ள பொதுக் குழுக் கூட்டம் ஒன்றில் வந்திருந்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையினரது ஆதரவுடன் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், ஆட்சியர் அல்லது அரசு, ஆணையின் மூலமாக, அத்தகைய நபரைப் பதவியிலிருந்து நீக்கி விடுதல் வேண்டும் என்பதோடு, இதனால் ஏற்படுகின்ற காலிப்பணியிடம், தற்செயல் காலிப்பணியிடம் போன்ற அதே முறையில் நிரப்பப்படுதலும் வேண்டும்.

**14. குடியானவர்கள் அமைப்பில் துணைக் குழுக்களை அமைத்தல்.–** மேலாண்மைக் குழுவானது இந்தச் சட்டத்தின்படி அதன் அலுவல்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றுள் ஏதொன்றையுமோ நிறைவேற்றுவதற்காகத் தொடர்புடைய குடியானவர்கள் அமைப்பின் உறுப்பினர்களுக்கு இடையே இருந்து அத்தகைய எண்ணிக்கையில் துணைக் குழுக்களை அமைத்தல் வேண்டும்.

**15. குடியானவர்கள் அமைப்பு ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும்.–** பிரிவு 2இன் (1) ஆம் கூறில் குறிப்பிடப்பட்ட குடியானவர்கள் அமைப்பு ஒவ்வொன்றும், தனித்த ஒரு பெயருடனும் தொடர் வழியுரிமையுடனும் பொதுவான இலச்சினையுடனும் கூடிய ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, ஒப்பந்தங்கள் செய்வதற்கான தகுதி பெற்றதாகவும், அது எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்குத் தேவையானதாகவும், தக்கதாகவும், உகந்ததாகவும் இருக்கக்கூடிய அனைத்துச் செயல்களையும் செய்யக்கூடியதாகவும், மற்றும் தலைவரால் அல்லது தலைவரைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற நபரால் அதன் கூட்டுடைமைப் பெயரில் வழக்கிடுதல் மற்றும் வழக்கிடப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** குடியானவர்கள் அமைப்பு எதுவும், அதன் சொத்து எதனையும், எந்த முறையிலும், சொத்து மாற்றம் செய்வதற்கு உரிமையுடையதாக ஆகுதல் கூடாது.

**16. குடியானவர்களின் அமைப்பில் மாறுதல்கள்.–** அரசானது, குடியானவர் அமைப்பின் நலன் கருதி, பாசனப் பரப்பிடம் எதிலும் அறிவிக்கை வாயிலாக இது குறித்துச் செய்யப்பட்ட விதிகளுக்கு இணங்கிய வகையில்,–

(a) ஏற்கனவே உள்ள குடியானவர்கள் அமைப்பு எதிலிருந்தும் பரப்பிடம் எதனையும் பிரிப்பதன் மூலம், புதிய குடியானவர் அமைப்பு ஒன்றினை உருவாக்கலாம்; அல்லது

(b) குடியானவர்கள் அமைப்பு எதனின் பரப்பிடத்தையும் அதிகரிக்கலாம்; அல்லது

(c) குடியானவர்கள் அமைப்பு எதனின் பரப்பிடத்தையும் குறைக்கலாம்; அல்லது

(d) குடியானவர்கள் அமைப்பின் எல்லைகளை மாற்றியமைக்கலாம்; அல்லது

(e) தவறு எதனையும் சரி செய்வதற்காக இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒன்றை நீக்கலாம்:

**வரம்புரை:** பெரும்பாலும் பாதிக்கப்படக்கூடிய குடியானவர்கள் அமைப்பிற்கு நியாயமான ஒரு வாய்ப்பினை வழங்கினாலன்றி, அத்தகைய பிரித்தல், அதிகரித்தல், குறைத்தல், மாற்றியமைத்தல் அல்லது நீக்கம் எதுவும் செய்யப்படுதல் கூடாது.

17. **வேட்பாளர்கள் அல்லது உறுப்பினர்களின் தகுதியின்மை.–** (1) நபர் எவரும், மேலாண்மைக் குழு எதனின் தலைவராகவோ அல்லது குழுத் தலைவராகவோ அல்லது உறுப்பினர் ஒருவராகவோ தெரிவு செய்யப்படுவதற்கு,–

(a) அவர் ஒரு சிற்றூராட்சி ஊழியராகவோ அல்லது இந்திய அரசின் அல்லது மாநில அரசின் அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு எதனின் அலுவலராகவோ அல்லது ஊழியராகவோ அல்லது அரசு நிதியிலிருந்து உதவி பெறுகின்ற நிறுவனத்தின் பணியாளராகவோ இருந்தால்;

(b) ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்குகின்ற குற்றச்செயல் எதனையும் அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதனின் படியும் செய்ததற்காகக் குற்றவியல் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவராக இருந்தால்;

(c) அவர் மனநிலை சரியற்றவராக இருந்து, தகுதிவாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால், அவ்வாறு விளம்பப்பட்டவராக இருந்தால்;

(d) அவர் ஒரு நொடிப்பு நிலையர் என நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரர் ஒருவராகவோ அல்லது விடுவிக்கப்படாத நொடிப்பு நிலையராகவோ இருந்தால்; அல்லது

(e) அவர் அரசுக்கோ அல்லது குடியானவர்கள் அமைப்பிற்கோ செலுத்தப்பட வேண்டிய நில வருவாய் அல்லது தண்ணீர் வசதிக் கட்டணங்கள் எவற்றையும் செலுத்தத் தவறியவராக இருந்தால்;

(f) சிற்றூராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியம் அல்லது பேரூராட்சி அல்லது நகராட்சி அல்லது மாநகராட்சி அல்லது மாநில அல்லது மைய அரசு அல்லது குடியானவர்களின் அமைப்பிற்கான, தொடர்புள்ள குடியானவர்களின் அமைப்பின் பரப்பிடத்தில் செய்யப்பட்டு வருகிற பணி எதிலுமோ அல்லது அதனுடன் இருந்து வருகிற ஒப்பந்தம் எதிலுமோ அவர் அக்கறையுள்ளவராக இருந்தால்

தகுதியுடையவராக மாட்டார்:

**வரம்புரை:** நபர் ஒருவர்,–

(i) நிறுமம் ஒன்றில், வெறும் பங்குடையவராக ஆனால் இயக்குநராக அல்லாமல்; அல்லது

(ii) அசையாச் சொத்தின் குத்தகை, விற்பனை அல்லது கொள்முதல்

எதிலுமோ அல்லது அதற்கான உடன்பாடு எதிலுமோ; அல்லது

(iii) பணத்தைக் கடனாகப் பெறுவதற்கான உடன்பாடு எதிலுமோ அல்லது பணத்தை மட்டுமே செலுத்துவதற்கான காப்பீடு எதிலுமோ; அல்லது

(iv) குடியானவர்கள் அமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பான விளம்பரம் எதுவும் எந்தச் செய்தித்தாளில் வந்துள்ளதோ அந்தச் செய்தித்தாள் எதிலும்,

தமது பங்கினைப் பெற்றிருப்பவராகவோ அல்லது அக்கறையுடையவராகவோ இருப்பதன் காரணமாக மட்டுமே அத்தகைய ஒப்பந்தத்தில் அல்லது பணியில் அக்கறையுள்ளவராகக் கருதப்படுதல் கூடாது.

**விளக்கம்.–** ஓர் ஒப்பந்தமானது முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கிற நிலையில், சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிக் குடியானவர்களின் அமைப்பு, மாநில அல்லது மைய அரசானது, ஒப்பந்தத்தின் கடப்பாடுகளில் தனது பங்கினை நிறைவேற்றி இருக்கவில்லை என்ற காரணத்தால் மட்டுமே, அந்த ஒப்பந்தமானது நிலுவையில் உள்ளதாகக் கருதப்படுதல் கூடாது என இதன்மூலம் ஐயங்களை அகற்றுவதற்காக விளம்பப்படுகிறது.

(2) குடியானவர்கள் அமைப்பின் மேலாண்மைக் குழு எதனின் ஒரு தலைவர் அல்லது குழுத் தலைவர் அல்லது உறுப்பினர்,–

(a) ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்கி இருக்கின்ற குற்றவியல் வழக்கொன்றில் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்படுவார் என்றால்; அல்லது

(b) நியாயமான காரணம் எதுவும் இன்றி மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ந்து வாராதிருப்பார் என்றால்,

பதவியில் தொடர்ந்து இருப்பதற்குத் தகுதியற்றவர்; மற்றும் உடனடியாக அவர் பதவி வகிப்பது அற்றுப்போதல் வேண்டும்.

**வரம்புரை:** இனம் (b)இன்படியான தகுதியின்மையானது, நிறை கர்ப்பிணி நிலையில் உள்ள பெண்ணைப் பொறுத்தவரையிலும் மற்றும் அவருக்குக் குழந்தை பிறந்ததற்குப் பின்னர் மூன்று மாத காலத்திற்கும் பொருந்தாது.

(3) நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் அவர் நீரைப் பயன்படுத்துபவராக இருப்பது அற்றுப்போகிறபோது, மேலாண்மைக்குழு ஒன்றின் உறுப்பினர் ஒருவராகவோ அல்லது தலைவர் ஒருவராகவோ அல்லது குழுத் தலைவர் ஒருவராகவோ அல்லது உறுப்பினர் ஒருவராகவோ இருப்பதும் அற்றுப்போதல் வேண்டும்; மற்றும் அவர் பதவியில் தொடர்ந்து இருப்பதற்குத் தகுதியற்றவர் ஆவார்.

**18. பதவி விலகல்.–** (1) குடியானவர்கள் அமைப்பின் மேலாண்மைக் குழு ஒன்றின் உறுப்பினர் ஒருவர், தொடர்புடைய மேலாண்மைக் குழுவின் தலைவர் அல்லது குழுத் தலைவருக்குப் பதிவு அஞ்சலின் மூலமாக அனுப்பப்பட்ட அல்லது அவரிடம் நேரடியாகக் கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றின் மூலமாக தமது பதவியை விட்டு விலகலாம்.

(2) தண்ணீரைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒன்றின் மேலாண்மைக் குழுவின் தலைவர், தொடர்புடைய பகிர்மானக் குழுவின் தலைவருக்குப் பதிவு அஞ்சலின் மூலம் அனுப்பப்பட்ட அல்லது அவரிடம்

நேரிடையாகக் கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றின் மூலமாக தமது பதவியை விட்டு விலகலாம்.

(3) பகிர்மானக் குழு ஒன்றின் மேலாண்மைக் குழுத் தலைவர், தொடர்புடைய திட்டக் குழுவின் தலைவருக்குப் பதிவு அஞ்சலின் மூலமாக அனுப்பப்பட்ட அல்லது அவரிடம் நேரிடையாகக் கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றின் மூலமாகத் தமது பதவியை விட்டு விலகலாம்.

(4) திட்டக் குழு ஒன்றின், மேலாண்மைக் குழுவின் தலைவர், உச்சநிலைக் குழுவின் தலைவருக்குப் பதிவு அஞ்சலின் மூலமாக அனுப்பப்பட்ட அல்லது அவரிடம் நேரிடையாகக் கொடுக்கப்பட்டக் கடிதம் ஒன்றின் மூலமாகத் தமது பதவியை விட்டு விலகலாம்.

(5) இந்தப் பிரிவின்படியான பதவி விலகல் எதுவும், அது ஏற்கப்பட்ட தேதியிலிருந்தோ அல்லது அது வரப்பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவடைந்ததன் பேரிலோ, இவற்றுள் எது முந்தியதோ அந்தத் தேதியிலிருந்து செயல்விளைவு கொள்ளுதல் வேண்டும்.

**19. காலியிடங்களை நிரப்புதல்.**– (1) பிரிவு 17இன் உட்பிரிவுகள் (2) அல்லது (3)இன்படி தகுதி இழந்ததன் காரணமாகவோ அல்லது இறப்பின், அல்லது பதவி விலகலின் காரணமாகவோ அல்லது வேறு காரணம் எதற்காகவும் மேலாண்மைக் குழு எதிலும் ஏற்படுகிற காலியிடம் ஒன்று, அத்தகைய காலி இடமானது பின்வரும் முறையில், உட்பிரிவு (2)இன்படி தேர்தலின் மூலமாக அந்தக் காலியிடம் நிரப்பப்படும் வரை பெயர் குறித்து நியமிப்பதன் மூலமாகவோ நிரப்பப்படுதல் வேண்டும்,–

(a) நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தில் உள்ள காலிப் பணியிடம் ஒன்று வகுத்துரைக்கப்படும் முறையில் பகிர்மானக் குழுவின் மேலாண்மைக்

குழுவினால் பெயர்குறித்து நியமிப்பதன் மூலமாக நிரப்பப்படுதல் வேண்டும்.

(b) பகிர்மானக் குழுவில் உள்ள காலிப்பணியிடம் ஒன்று வகுத்துரைக்கப்படும் முறையில் திட்டக் குழுவின் மேலாண்மைக் குழுவினால் பெயர் குறித்து நியமிப்பதன் மூலமாக நிரப்பப்படுதல் வேண்டும்.

(c) திட்டக் குழுவில் உள்ள காலிப்பணியிடம் ஒன்று வகுத்துரைக்கப்படும் முறையில் உச்சநிலைக் குழுவால் நிரப்பப்படுதல் வேண்டும்.

(2) ஆட்சியர், அத்தகைய காலிப்பணியிடம் ஏற்பட்ட தேதியிலிருந்து ஒருமாத கால அளவிற்குள் காலிப் பணியிடத்தை நிரப்புவதற்குத் தேர்தல்களை நடத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

(3). உட்பிரிவு (2)இன்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியானவர்கள் அமைப்பின் உறுப்பினர் ஒருவரின் அல்லது தலைவர் ஒருவரின் அல்லது குழுத் தலைவர் ஒருவரின் பதவிக் கால அளவானது, அவர் வழக்கமாக தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் அந்தப் பதவிக் காலமானது எந்த நேரத்தில் முடிவடைந்திருக்குமோ அந்த நேரத்தில் முடிவடைதல் வேண்டும்.

**20. காலியிடம் முதலியவற்றினால் செயல்கள் செல்லத்தகாதவை ஆகுதல் கூடாது.–** மேலாண்மைக் குழு எதனின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், மேற்சொன்ன மேலாண்மைக் குழுவில் காலியிடம் எதுவும் இருக்கின்றது அல்லது அதனை அமைத்துருவாக்குவதில் தவறு இருக்கிறது என்ற காரணத்தினால் மட்டுமே செல்லத்தகாதவை ஆக்குதல் கூடாது.

**21. கூட்டங்கள்.–** குடியானவர்கள் அமைப்பின் மற்றும் அதனுடைய மேலாண்மைக் குழுக்களின் கூட்டங்கள் வகுத்துரைக்கப்படும் கால அளவிலும்,

நடைமுறைப்படியும் குறைவெண் வரம்புடனும் இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் III

## குடியானவர்கள் அமைப்பின் அலுவல்கள்

**22. நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் அலுவல்கள்.–** நீரைப் பயன்படுத்துவோர் சங்கமானது, பின்வரும் அலுவல்களைப் புரிதல் வேண்டும், அதாவது:–

(a) பகிர்மானக் குழுவின் அல்லது திட்டக் குழுவின் மேலாண்மைக் குழுவினால் ஏற்கப்பட்ட தகுதியளிப்புப் பரப்பிடம், மண்வகை, பயிர் அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பகிர்மானக் குழுவாலும் திட்டக் குழுவாலும் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்கிய வகையில், ஒவ்வொரு நீர்ப்பாசனப் பருவக் காலத்திற்கும் செயல் திட்டம் ஒன்றையும் சுழற்சி நீர் வழங்கு முறையையும் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்;

(b) அவ்வப்போது நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் நிதியைப் பயன்படுத்தி ஒவ்வொரு பயிர் பருவக் காலத்தின் முடிவிலும், அதன் செயற்பாட்டிலுள்ள பரப்பிடத்தில் நீர்ப்பாசன முறையைப் பேணி வருவதற்கானத் திட்டம் ஒன்றைத் தயாரித்தலும், அதன் செயற்பாட்டிலுள்ள பரப்பிடத்தில் அமைந்துள்ள நீர் வழிகள் மற்றும் நீர் வடிகால்கள் ஆகிய இரண்டு பகிர்மான முறைகளிலும் உள்ள பராமரிப்புப் பணிகளை நிறைவேற்றுதல்;

(c) சுழற்சிமுறை நீர் வழங்குதலுக்கு இணங்கிய வகையில் அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தின் கீழ் வருகின்ற பற்பல மதகுகளுக்கு இடையே நீரைப் பயன்படுத்துவதை முறைப்படுத்துதல்;

(d) ஒதுக்கி அளிக்கப்பட்டுள்ள நீரைப் பயன்படுத்துவதில் சிக்கனத்தை மேம்படுத்துதல்;

(e) அதன் கோரிக்கையைத் தயாரிப்பதிலும், தண்ணீர்க் கட்டணங்களை வசூலிப்பதிலும் அரசின் வருவாய்த் துறையின் அதிகாரிகளுக்கு உதவி செய்தல்;

(f) அரசின் வருவாய்த் துறையினால் வெளியிடப்பட்ட நீரைப் பயன்படுத்துவோரைப் பற்றிய பதிவேடு ஒன்றினைப் பேணி வருதல்;

(g) செயற்பாட்டுப் பரப்பிடத்திற்குள்ளான நீர்ப்பாசன முறையைப் பற்றிய விளக்க விவரப் பட்டியல் ஒன்றைத் தயாரித்தலும் பேணி வருதலும்;

(h) பாசனத்திற்கான நீர் வழியைக் கவனித்து மேலாண்மை செய்தல்;

(i) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்திற்குள்ளாக நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் உறுப்பினர்களுக்கிடையே எழும் பூசல்களைத் தீர்வு செய்தல்;

(j) வள ஆதாரங்களைத் திரட்டுதல்;

(k) கணக்குகளைப் பேணி வருதல்;

(l) கணக்குகளுக்கான ஆண்டுத் தணிக்கை செய்வித்தல்;

(m) மேலாண்மைக் குழுவின் தேர்தல்களை நடத்துவதில் உதவி செய்தல்;

(n) வகுத்துரைக்கப்படும் வேறு பதிவுருக்களைப் பேணி வருதல்;

(o) பகிர்மானக் குழு மற்றும் திட்டக் குழுவின் முடிவுகளுக்கு இணங்கி நடத்தல்;

(p) வகுத்துரைக்கப்படும் முறையில் பொதுக் குழுக் கூட்டங்களை நடத்துதல்;

(q) கால்வாய் மற்றும் குளம் புறம்போக்கு பரப்பிடங்களில் பண்ணைத் தோட்டம் அமைக்க வழிவகை செய்வதை ஊக்குவித்தல்; மற்றும் அத்தகைய பண்ணைத் தோட்டங்களைப் பாதுகாத்தலும் பேணி வருதலும்;

(r) நீரை முறையாகப் பங்கிடுதல் மற்றும் வகுத்துரைக்கப்படும் காலமுறையின்படி சமூகத் தணிக்கையை நடத்துதல்;

(s) தண்ணீர் பயன்படுத்துவோர் சங்கத்தில் அதிகார வரம்பிலுள்ள பரப்பிடங்களில் அமைந்துள்ள கால்வாய், வடிகால், குளம் புறம்போக்குகளின் மீது அத்துமீறி செய்யப்பட்ட ஆக்கிரமிப்பை அகற்றுதல்.

23. **பகிர்மானக் குழுவின் அலுவல்கள்**.– பகிர்மானக் குழுவானது, பின்வரும் அலுவல்களை ஆற்றுதல் வேண்டும், அதாவது;–

(a) திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தோடு இணங்குகிற வகையில் ஒவ்வொரு பாசனப் பருவக் காலத்தின் தொடக்கத்திலும் தகுதி, பரப்பிடம், மண்வகை, பயிர் அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நடைமுறைத் திட்டம் ஒன்றை தயாரித்தல்;

(b) ஒவ்வொரு பயிர்ப் பருவக் காலத்தின் இறுதியிலும் அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்திற்குள்ளாக அமைந்துள்ள கிளைக் கால்வாய்கள், கால்வாய்ப் பிரிவுகள், நடுத்தர வடிகால்கள் ஆகியவற்றைப் பேணி வருவதற்காகத் திட்டம் ஒன்றைத் தயாரித்தல் மற்றும் அவ்வப்போது நிதியைப் பயன்படுத்திப் பராமரிப்பு பணிகளை நிறைவேற்றுதல்;

(c) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தின்கீழ் வருகின்ற நீரைப் பயன்படுத்துவோர் சங்கங்கள்

பலவற்றிற்கு இடையே தண்ணீர் பயன் படுத்தப்படுவதை முறைப்படுத்துதல்;

(d) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தில் நீரைப் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கு இடையே பூசல்கள் ஏதேனும் இருந்தால், அவற்றைத் தீர்வு செய்தல் ;

(e) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தில் நீரைப் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கானப் பதிவேடு ஒன்றினைப் பேணி வருதல்;

(f) வடிகால்கள் உள்ளிட்ட, அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தில் உள்ள நீர்ப்பாசன முறையைப் பற்றிய விளக்க விவரப் பட்டியல் ஒன்றைப் பேணி வருதல்;

(g) ஒதுக்கியளிக்கப்பட்டுள்ள நீரைப் பயன்படுத்துவதில் சிக்கன நடவடிக்கையை மேம்படுத்துதல்;

(h) கணக்குகளைப் பேணி வருதல்;

(i) அதன் கணக்குகளின் ஆண்டுத் தணிக்கையைச் செய்வித்தல்;

(j) வகுத்துரைக்கப்படும் பிற பதிவுருக்களைப் பேணி வருதல்;

(k) பாசனத்திற்கான நீர் பாய்வதைக் கவனித்து மேலாண்மை செய்தல்;

(l) வகுத்துரைக்கப்படும் விதத்தில் பொதுக் குழுக் கூட்டங்களை நடத்துதல்;

(m) திட்டக் குழுவின் முடிவுகளுக்கு இணங்கி நடத்தல்;

(n) வகுத்துரைக்கப்படும் முறையில் நீர்ப் பகிர்மானத்தையும், காலமுறைப்படி சமூகத் தணிக்கையயும் செய்வித்தல்;

(o) மேலாண்மைக் குழுவின் தேர்தல்களை நடத்துவதில் உதவி செய்தல்;

(p) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தில் பண்ணைத் தோட்டங்களுக்கு வழிவகை செய்து ஊக்கமளித்தல்;

(q) பகிர்மானக் குழுவின் அதிகார வரம்பிலுள்ள பரப்பிடங்களில் அமைந்துள்ள, கால்வாய், வடிகால்கள், குளம் புறம்போக்குகளின் மீது அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதை அகற்றுதல்.

**24. திட்டக் குழுவின் அலுவல்கள்.–** திட்டக் குழுவானது, பின்வரும் அலுவல்களை ஆற்றுதல் வேண்டும், அதாவது:–

(a) ஒவ்வொரு பாசனப் பருவ காலத்தின் தொடக்கத்திலும், திட்டப் பரப்பிடம் முழுவதையும் பொறுத்த அளவில், தகுதி வாய்ந்த அதிகார அமைப்பினால் அனுமதிக்கப்பட்ட தகுதி, பரப்பிடம், மண் வகை, பயிர் அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நடைமுறைத் திட்டம் ஒன்றைத் தயாரித்தல்;

(b) ஒவ்வொரு பயிர்ப் பருவ காலத்தின் இறுதியிலும், அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்திற்குள் அமைந்துள்ள பெரிய வடிகால்கள் உள்ளிட்ட பாசன முறையைப் பேணிவருவதற்கானத் திட்டம் ஒன்றுக்கு ஒப்புதல் அளித்தல் மற்றும் அவ்வப்போது திட்டக் குழுவின் நிதியைப் பயன்படுத்திப் பராமரிப்பு பணிகளை நிறைவேற்றுதல்;

(c) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தில் உள்ள பகிர்மானக் குழுக்கள், நீர் பயன்படுத்துவோர் சங்கங்கள் ஆகியவற்றின் பணிப் பட்டியல் ஒன்றைப் பேணி வருதல்;

(d) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்தில் உள்ள கிளைக் கால்வாய்கள், கால்வாய்ப் பிரிவுகள், வடிகால்

முறைகள் ஆகியவற்றைப் பற்றிய விளக்க விவரப் பட்டியல் ஒன்றைப் பேணி வருதல்;

(e) பகிர்மானக் குழுக்களிடையே பூசல்கள் ஏதேனும் இருந்தால் அதனைத் தீர்வு செய்தல்;

(f) ஒதுக்கியளித்துள்ள நீரைப் பயன்படுத்துவதில் சிக்கன நடவடிக்கையை மேம்படுத்துதல்;

(g) கணக்குகளைப் பேணி வருதல்;

(h) அதன் கணக்குகளுக்கான ஆண்டுத் தணிக்கையைச் செய்தல்;

(i) வகுத்துரைக்கப்படும் பிற பதிவுருக்களைப் பேணி வருதல்;

(j) வகுத்துரைக்கப்படும் பொதுக் குழுக் கூட்டங்களை நடத்துதல்;

(k) வகுத்துரைக்கப்படும் விதத்தில் நீர்ப் பங்கீட்டையும்; காலமுறைப்படியான சமூகத் தணிக்கையையும் முறையாகச் செய்வித்தல்,

(l) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்திற்குள் பண்ணைத் தோட்டங்களுக்கு வழிவகை செய்து ஊக்கமளித்தல்;

(m) திட்டக் குழுவின் அதிகார வரம்பிலுள்ள பரப்பிடங்களில் அமைந்துள்ள கால்வாய், வடிகால்கள், குளம், புறம்போக்குகளின் மீது அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதை அகற்றுதல்.

**25. கட்டணங்களை விதிப்பதற்கும் வசூலிப்பதற்கும் அதிகாரம்.**— ஒரு குடியானவர்கள் அமைப்பானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவும், அந்த அமைப்பின் இலக்குகளை அடைவதற்காகவும், அதன் பணிகளை

(அலுவல்களை) ஆற்றுவதற்காகவும், அவ்வப்போது, வகுத்துரைக்கப்படும் விதத்தில், நீரைப் பயன்படுத்துபவர் ஒவ்வொருவரிடம் இருந்தும், ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஹெக்டேருக்கு ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாத வரையிலான கட்டணங்களை விதித்து வசூலிக்கலாம்.

**26. தகுதிவாய்ந்த அலுவலரை நியமித்தலும் அவரது அலுவல்களும்.–** (1) அரசானது அறிவிக்கையின் மூலமாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக குடியானவர்கள் அமைப்பு ஒவ்வொன்றுக்கும், தாம் தேவை எனக் கருதும் நீர்வள நிறுவனத்தின் அலுவலரைத் தகுதிவாய்ந்த அலுவலராக நியமிக்கலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி, அத்தகைய குடியானவர்கள் அமைப்பினால் எடுக்கப்படும் அனைத்து முடிவுகளையும் நடைமுறைப்படுத்துவதிலும், அவற்றை நிறைவேற்றுவதிலும் முறையே அத்தகைய குடியனவர்கள் அமைப்பிற்குப் பொறுப்பானவராக இருத்தல் வேண்டும்.

(3) குடியானவர்கள் அமைப்பு ஒவ்வொன்றும், தகுதிவாய்ந்த அதிகாரியால் கோரப்படக்கூடிய ஒத்துழைப்பையோ அல்லது உதவியையோ கொடுத்தல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அவ்வப்போது தகுதிவாய்ந்த அதிகாரியால் பிறப்பிக்கப்படக்கூடிய பணிப்புரைகளுக்கோ அறிவுறுத்தங்களுக்கோ இணங்கி நடத்தல் வேண்டும்.

## அத்தியாயம் IV

## குடியானவர்கள் அமைப்பின் நிதி

**27. குடியானவர்கள் அமைப்பின் நிதி.–** குடியானவர்கள் அமைப்பு ஒவ்வொன்றுக்கும் நிதி ஒன்று

இருத்தல் வேண்டும், அது பின்வரும் வள ஆதாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்: அதாவது:–

(1) குடியானவர்கள் செயற்பாட்டுப் பரப்பிடத்தில் வகுத்துரைக்கப்படும் வீதங்களில் வசூலிக்கப்பட்ட நீர் கட்டணங்களின் பங்காக அரசிடமிருந்து வரப்பெற்ற மானியங்கள்;

(2) செயற்பாட்டுப் பரப்பிடத்தின் மேம்பாட்டிற்காக மாநில மற்றும் மைய அரசினால் வழங்கப்படக்கூடிய பிற நிதி;

(3) தனது செயற்பாட்டுப் பரப்பிடத்தில் சிக்கன மேம்பாட்டுச் செயல்கள் எதனையும் ஏற்றுக்கொள்வதற்காக நிதி நிறுவனம் எதிலிருந்தும் பெறப்பட்ட வளஆதாரங்கள்;

(4) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்திற்குள்ளாக நீர்ப்பாசன முறையோடு சேர்ந்த சொத்துக்கள் மற்றும் உடைமைகளிலிருந்து அரசினால் வழங்கப்படக் கூடிய வருமானம்;

(5) பிரிவு 25இன்படி வசூலிக்கப்பட்ட கட்டணங்கள்;

(6) வேறு வழிவகை எதிலிருந்தும் பெறப்படும் தொகைகள்.

**28. நிதியில் வைப்பீடு செய்தலும் அதனை நிருவாகம் செய்தலும்.–** (1) குடியானவர்கள் அமைப்பானது, தனது நிதியைத் தேசிய வங்கி ஒன்றிலோ அல்லது கூட்டுறவு வங்கி ஒன்றிலோ அல்லது மேலாண்மை கூட்டுறவுச் சங்கம் எதிலுமோ வைத்திருத்தல் வேண்டும்;

(2) இந்த நிதி, இந்தச் சட்டத்தின் நிருவாகத்தில் தொடர்புடைய குடியானவர்கள் அமைப்பின் மேலாண்மைக் குழுவிற்கு ஏற்பட்ட செலவுகளை எதிர்கொள்வதற்குப்

பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர வேறு நோக்கம் எதற்காகவும் பயன்படுத்தப்படுதல் கூடாது.

**29. கடன்தீர் நிதி.–** (1) குடியானவர்கள் சங்க (உழவர் அமைப்பு)த்தின் மேலாண்மைக் குழு, கடன் வாங்கிய பணத்தைத் திரும்பச் செலுத்துவதற்காகக் கடன் தீர் நிதி ஒன்றைப் பராமரித்து வருதல் வேண்டும். அக்கடன் தீர் நிதிக்கு நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள், அவ்வாறு கடன் வாங்கிய பணம் அனைத்தையும் திரும்பச் செலுத்துவதற்குப் போதிய தொகையைக் கடன் தீர் நிதியில் ஒவ்வோர் ஆண்டும் செலுத்துதல் வேண்டும்;

(2) கடன் தீர் நிதி அல்லது அதன் பகுதி எதுவும், அது எந்தக் கடனைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்டதோ, அந்தக் கடனைத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படலாம் மற்றும் அத்தகைய கடன் முழுவதுமாக அடைக்கப்படும் வரையில், அது வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன் படுத்தப்படுதல் கூடாது.

**30. தணிக்கை.–** குடியானவர்கள் சங்கம் ஒவ்வொன்றும், அதன் கணக்குகள் வகுத்துரைக்கப்படும் முறையில், தணிக்கையாளர்களால் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட வேண்டும்.

**31. வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.–** குடியானவர்கள் சங்கத்தின் மேலாண்மைக் குழு, ஒவ்வொரு நிதியாண்டிலும், அடுத்த நிதியாண்டினைப் பொறுத்த அக்குழுவின் திட்டமிடப்பட்ட வரவுகளையும், செலவினங்களையும் காட்டுகின்ற வரவு–செலவுத் திட்டம் ஒன்றினை வகுத்துரைக்கப்படும் அத்தகைய படிவத்தில் தயாரித்து அத்தகைய முறையில் பொதுக் குழுவின் முன்பு அனுமதிக்காக தாக்கல் செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் V

## குற்றச்செயல்களும் பணத்தண்டங்களும்

**32. குற்றச்செயல்களும் பணத்தண்டங்களும்.–** சட்டப்படியான அதிகார உரிமையின்றிப் பின்வரும்:–

(a) பாசன முறை எதையும் சேதப்படுத்துகிற, மாற்றுகிற, பெரிதாக்குகிற அல்லது தடை செய்கிற; அல்லது

(b) பாசன முறையோடு குறுக்கிடுகிற, அதை அதிகரிக்கிற அல்லது நீர்வரத்தை அல்லது ஓட்டத்தைப் பாசன முறை மூலமாக அதன் மேலாகவோ அல்லது கீழாகவோ குறைக்கிற; அல்லது

(c) பாசன முறையைப் பராமரிப்பதற்குப் பொறுப்புடையவர், அதன் நீர் வீணாகாது தடுப்பதற்கான முன்னெச்சரிக்கையைச் சரியாக எடுக்காது புறக்கணிக்கிற அல்லது அதிகாரமளிக்கப்பட்டபடி நீர் பகிர்ந்தளிக்கப்படுவதில் குறுக்கிடுகிற அல்லது அதிகாரமளிக்கப்படாத முறையில் அல்லது அருகிலுள்ள நிலத்திற்குச் சேதம் விளைவிக்கும் முறையில் நீரைப் பயன்படுத்துகிற; அல்லது

(d) பாசன முறை எதனின் நீரையும், எந்த நோக்கங்களுக்காக அது சாதாரணமாகப் பயன்படுத்தப் படுகிறதோ, அந்நோக்கங்களுக்கான அதன் பயனை குறைக்கும் முறையில் அதன் தூய்மையைக் கெடுக்கிற அல்லது அதை நச்சுப்படுத்துகிற; அல்லது

(e) அரசுப் பணியாளரின் அதிகாரத்தால் நிர்ணயிக்கப்பட்ட நீர் மட்டக்குறிகளை அல்லது நீர் அளவெல்லை அல்லது வேறு குறி அல்லது நீர் அடையாளம் எதையும் தடுக்கிற அல்லது அகற்றுகிற; அல்லது

(f) பாசன முறை எதனின் மதகு அல்லது புறமதகு அல்லது இது போன்ற சாதனம் எதையும் திறக்கிற, மூடுகிற அல்லது தடுக்கிற அல்லது திறக்க, மூட அல்லது தடுக்க முயற்சிக்கிற; அல்லது

(g) தண்ணீர் பயன்பாட்டாளர் சங்கம் அல்லது பகிர்மானக்குழு அல்லது திட்டமிடும் குழுவால் தீர்மானம் செய்யப்பட்ட நீர்வழங்கு சுழற்சிமுறை அல்லது நீர்ப் பங்கீடு அல்லது ஒழுங்குமுறையை மீறுகிற,

செயல்களைச் செய்யும் எவரும் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டதன் பேரில், இரண்டாண்டு காலஅளவிற்குச் சிறைத் தண்டனையுடனோ அல்லது ஐந்தாயிரம் ரூபாய் வரை நீடிக்கப்படக்கூடிய பணத்தண்டத்துடனோ அல்லது இரண்டுடனோ தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**33. குற்றச்செயல்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.–** நீதி மன்றம் எதுவும், இந்தச் சட்டத்தின்படி குற்றச்செயல் ஒன்றினைத் தகுதி வாய்ந்த அதிகாரி அல்லது குடியானவர்கள் சங்க மேலாண்மைக் குழுத் தலைவரால் அல்லது குழுத் தலைவரால் செய்யப்பட்ட முறையீட்டின் பேரில் அல்லாமல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் கூடாது.

**34. வேறு சட்டங்களின்படியான தண்டனைக்குத் தடையில்லை.–** இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், அப்போதைக்கு நடைமுறையிலுள்ள வேறு சட்டம் எதன்படியும், இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதையொட்டியோ செய்யப்பட்ட செயல் அல்லது விடுகை எதற்காகவும் குற்ற வழக்குத் தொடுக்கப்படுவதிலிருந்தும், தண்டிக்கப்படுவதிலிருந்தும் நபர் எவரையும் தடுத்தல் கூடாது.

**வரம்புரை:** நபர் எவரும் ஒரே குற்றத்திற்காக ஒருமுறைக்கு மேலாக, குற்றவழக்குத் தொடுக்கப்படுதலும், தண்டிக்கப்படுதலும் கூடாது.

**35. குற்றச்செயல்களை இணக்கமாகத் தீர்த்தல்.–** (1) பிரிவு 32இன்படி தண்டிக்கத்தக்கக் குற்றச்செயல் எதுவும், பிரிவு 33இன்படி முறையீடு செய்யும் முன்னரோ அல்லது அதன் பின்னரோ, தகுதிவாய்ந்த அதிகாரியாலோ அல்லது குடியானவர்கள் சங்க மேலாண்மைக் குழுவின் தலைவரோ அல்லது குழுத் தலைவரோ தீர்மானிக்கும் தொகையை அரசின் கணக்கில் செலுத்தியதின் பேரில், அக்குற்றச்செயல் தகுதி வாய்ந்த அதிகாரியாலோ அல்லது தலைவராலோ அல்லது குழுத் தலைவராலோ இணக்கமாகத் தீர்க்கப்படலாம்:

**வரம்புரை:** அத்தகைய தொகையானது எந்த நிலையிலும், அவ்வாறு இணக்கமாகத் தீர்க்கப்பட்ட குற்றச் செயலுக்காக இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்படும் அபாராதத் தொகையின் உச்ச அளவிற்கு மேற்படுதல் கூடாது.

(2). உட்பிரிவு (1) இன்படி ஒரு குற்றச் செயலானது இணக்கமாகத் தீர்க்கப்பட்டிருக்கிறபோது, அக்குற்றவாளிக்கு எதிராக, நடவடிக்கை அல்லது மேல்நடவடிக்கை எதுவும், அவ்வாறு இணக்கமாகத் தீர்க்கப்பட்ட குற்றச்செயலைப் பொறுத்து, எடுக்கப்படுதல் கூடாது. அக்குற்றவாளி, பாதுகாவலில் வைக்கப்பட்டிருந்தால், உடனடியாக விடுதலை செய்யப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்படித் தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதுவும், இப்பிரிவின்படி வகை செய்யப்பட்டுள்ள விதத்தில் தவிர, இணக்கமாகத் தீர்க்கப்படுதல் கூடாது.

## அத்தியாயம் VI

## பூசல்களைத் தீர்வு செய்தல்

**36. பூசல்களைத் தீர்வு செய்தல்.–** (1) குடியானவர்கள் சங்க உறுப்பினர்களுக்கிடையே அச்சங்கத்தின் அமைப்பு,

மேலாண்மை, அதிகாரங்கள் அல்லது அலுவல்கள் குறித்து எழும் பூசல் அல்லது கருத்து வேறுபாடு எதுவும் அவ்விவசாயிகள் சங்கத்தின் மேலாண்மைக் குழுவால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) நீர்ப் பயன்பாட்டாளர்கள் சங்க உறுப்பினர் ஒருவருக்கும் மேலாண்மைக் குழுவிற்கும் இடையிலோ அல்லது இரண்டு அல்லது அவற்றுக்கு மேலான நீர் பயன்பாட்டாளர்கள் சங்கங்களுக்கு இடையேயோ எழும் பூசல் அல்லது கருத்து வேறுபாடு எதுவும், நீர்ப் பங்கீட்டுக் குழுவின் மேலாண்மைக் குழுவால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) உறுப்பினர் ஒருவருக்கும் பங்கீட்டாளர் குழுவிற்கும் இடையிலோ அல்லது இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட நீர்ப் பங்கீட்டாளர்கள் குழுக்களுக்கும் இடையிலோ எழும் அத்தகைய பூசல் அல்லது கருத்து வேறுபாடு எதுவும் நீர்ப் பகிர்மானக் குழுவின் மேலாண்மைக் குழுவால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(4) திட்டமிடும் குழு உறுப்பினர் ஒருவருக்கும் திட்டமிடும் குழுவின் மேலாண்மைக் குழுவிற்கும் இடையிலோ அல்லது இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட திட்டமிடும் குழுக்களின் உறுப்பினர்களுக்கு இடையிலோ எழும் பூசல் அல்லது கருத்து வேறுபாடு எதுவும் உச்சநிலைக் குழுவால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும், அதன் முடிவே அறுதியானதாகும்.

(5) இப்பிரிவின்படியான பூசல் அல்லது கருத்து வேறுபாடு ஒவ்வொன்றும், அப்பூசல் அல்லது கருத்து வேறுபாடு, குறித்து அனுப்பப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

**37. மேல்முறையீடுகள்.–** (1) தண்ணீர் பயன்பாட்டாளர் சங்கத்தின் மேலாண்மைக் குழுவால் செய்யப்பட்ட பூசலுக்குரிய அல்லது கருத்து வேறுபாட்டிற்கான முடிவினால் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனாலும் குறையுற்ற தரப்பினர் எவரும், நீர்ப் பங்கீட்டுக் குழுவின் மேலாண்மைக் குழுவிற்கு மேல்முறையீடு செய்யலாம். அத்தகைய மேல்முறையீட்டில் அதன் முடிவே அறுதியானதாகும்.

(2) நீர்ப்பங்கீட்டுக் குழுவின் மேலாண்மைக் குழுவால் செய்யப்பட்ட பூசலுக்குரிய அல்லது கருத்து வேறுபாட்டிற்கான முடிவினால் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனாலும் குறையுற்ற தரப்பினர் எவரும், நீர்ப்பங்கீட்டுக் குழுவின் மேலாண்மைக் குழுவிற்கு மேல்முறையீடு செய்யலாம். அத்தகைய மேல்முறையீட்டில் அதன் முடிவே அறுதியானதாகும்.

(3) திட்டமிடும் குழுவின் மேலாண்மைக் குழுவால் செய்யப்பட்ட பூசலுக்குரிய அல்லது கருத்து வேறுபாட்டிற்கான முடிவினால் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனாலும் குறையுற்ற தரப்பினர் எவரும், உச்சநிலைக் குழுவிற்கு மேல்முறையீடு செய்யலாம். அத்தகைய மேல்முறையீட்டில் அதன் முடிவே அறுதியானதாகும்.

(4). உட்பிரிவுகளில் (1) அல்லது (2) அல்லது (3) இல் எதன்படியும் மேல்முறையீடு எதுவும், அந்த முடிவு அல்லது ஆணை குறையுற்ற தரப்பினருக்குத் தெரிவிக்கப்பட்ட பதினைந்து நாட்களுக்குள் தாக்கல் செய்யப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின்படி தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடு ஒவ்வொன்றும், அது தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் VII

## பல்வகை

**38. பதிவுருக்கள்.–** (1) குடியானவர்கள் சங்கம் ஒவ்வொன்றும், பின்வரும் கணக்குகள், பதிவுருக்கள், ஆவணங்களைத் தன் அலுவலகத்தில் பேணிவருதல் வேண்டும், அதாவது:–

(a) நாளது தேதி வரையிலான இச்சட்டத்தின் நகல்;

(b) குடியானவர்கள் சங்கம் செயற்படும் பரப்பளவின் வரைபடமும் அத்துடன் நீர்வள ஆதார அமைப்புடன் கலந்தாலோசித்துத் தயாரிக்கப்பட்ட அமைப்பின் வரைபடமும், நீர்ப்பங்கீட்டுப் பரப்பளவின் அமைப்புப் பற்றிய வரைபடமும்;

(c) சொத்திருப்புகள் மற்றும் கடப்பாடுகளின் விவர உரை;

(d) குறிப்புப் புத்தகம்;

(e) வரவு செலவுக் கணக்குக்காட்டும் கணக்குப் புத்தகங்கள்;

(f) குடியானவர்கள் சங்கத்தால் கொள்முதல் செய்யப்பட்ட மற்றும் விற்கப்பட்ட சரக்குகளின் கணக்குப் புத்தகங்கள்;

(g) அளவுப் பதிவேடுகள், நில அளவைப் புத்தகங்கள், பணிப்புரைகளும் அவை போன்ற பிறவும்;

(h) தணிக்கை அறிக்கைகள் மற்றும் விசாரணை அறிக்கைகளின் நகல்கள்;

(i) அவ்வப்போது வகுத்துரைக்கப்படும் வேறு கணக்குகள், பதிவுருக்கள், ஆவணங்கள் ஆகியவை.

(2) குடியானவர்கள் சங்க உறுப்பினர்களின் தகவலுக்காகக் கணக்குப் புத்தகங்களும் வேறு பதிவுருக்களும் திறந்து வைக்கப்படுதல் வேண்டும்.

**39. குடியானவர்கள் சங்கத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய பணத்தை நிலவருவாய் நிலுவையைப் போன்றே வசூலித்தல்.–** இச்சட்டத்தின்படி அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள வேறு சட்டம் எதன்படியும் எடுக்கப்பட்டு வருகின்ற அல்லது எடுக்கப்படக்கூடிய பிற நிலுவை வசூல்முறைக்கு பாதகம் இல்லாமல், குடியானவர்கள் சங்கத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய பணம் எதுவும் நிலவருவாய் நிலுவையைப் போன்றே வசூலிக்கப்படலாம். அவ்வாறு வசூலிக்கும் நோக்கத்திற்காகத் தகுதிவாய்ந்த அதிகாரி 1864 ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வசூலிக்கும் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் II/1864) மாவட்ட ஆட்சியரின் அதிகாரங்களைக் கொண்டிருப்பார்.

**40. கூட்டங்கள்.–** குடியானவர்கள் சங்கம் மற்றும் மேலாண்மைக் குழுவின் கூட்டம், அதன் நடைமுறை, கூட்டக் கால இடைவெளிகள், அதன் தலைமை, அதன் குறைவெண் வரம்பு ஆகியவை வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

**41. ஆணையரின் நியமனம்.–** (1) அரசு, இந்தச் சட்டத்தின் படியான அல்லது அதனையொட்டி செய்யப்பட்ட விதிகளின் படியான அலுவல்களை நிறைவேற்றுகையில் தகுதி வாய்ந்த அதிகாரி மற்றும் ஆட்சியர்களின் மீது பொதுக் கட்டுப்பாடும் மேற்பார்வையும் செய்யுமாறு ஆணையர் ஒருவரை நியமிக்கலாம்;

(2) ஆணையரால் செலுத்தப்படும் அதிகாரங்களும் நிறைவேற்றப்படும் அலுவல்களும் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

**42. ஏற்கனவே அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட குடியானவர்கள் சங்கங்களை இணைத்தலும் இடைக்கால மாற்று ஏற்பாடுகளும்.–** (1) இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு, பங்கேற்பு நீர்ப்பாசன மேலாண்மையின் அலுவல்களை ஆற்றி வரும் மற்றும் பிரிவு 3இன்படி நீர் பயன்பாட்டாளர்கள் சங்கத்தின் பரப்பிடம் என்று விளம்பப்படும் பரப்பிடம் எதிலும் செயற்படும் நோக்கத்திற்காக, அந்தப் பரப்பிடத்தில் பிரிவு 5க்கு இணங்க நீர் பயன்பாட்டாளர்கள் சங்க மேலாண்மைக் குழு அமைக்கப்பட்ட உடனேயே 1975ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்களைப் பதிவு செய்தல் சட்டத்தின்படி ஏற்கனவே அமைக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்ட குடியானவர்கள் சங்கம் எதுவும், அற்று போதல் வேண்டும்.

**வரம்புரை:** இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு, நீர்வள ஆதார அமைப்பின் அதிகாரி எவருடனும் குடியானவர்கள் சங்கம் எதுவும் உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டிருக்கிறபோது இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து இந்தச் சட்டத்திற்கு இணங்க, நீர் பயன்பாட்டாளர்கள் சங்கத்தின் மேலாண்மைக்குழு அமைத்துருவாக்கப்படும் வரையில் அந்தந்தப் பரப்பிடங்களில் நீர் பயன்பாட்டாளர்கள் சங்கத்தின் அதிகாரங்களையும், அலுவல்களையும் தொடர்ந்து செலுத்துதலும் ஆற்றுதலும் வேண்டும்.

(2) அரசு, அறிவிக்கை வாயிலாகக் குடியானவர்கள் சங்கம் மேலாண்மைக் குழு முறையாக அமைக்கப்பட்டு அல்லது மறு அமைப்புச் செய்யப்பட்டு, இச்சட்டத்தின் வகைமுறைகளின்படி மேலாண்மைக்குழு பதவி ஏற்கும் வரையில், அந்தக் குடியானவர்கள் சங்கத்தின் மற்றும் மேலாண்மைக்குழுவின் அதிகாரங்களைச் செலுத்தியும், அலுவல்களை ஆற்றியும் வருவதற்காக நீர்வள ஆதார அமைப்பிலிருந்து அதிகாரிகளை நியமிக்கலாம்.

**43. குடியானவர்கள் சங்கத்தின் ஆணைகளுக்கும் ஆவணங்களுக்கும் உறுதிச் சான்று அளித்தல்.–** குடியானவர்கள் சங்கத்தின் அனைத்து அனுமதிகள், ஆணைகள், முடிவுகள், அறிவிப்புகள் மற்றும் வேறு ஆவணங்களும் அத்தகைய குடியானவர்கள் சங்கத்தின் தலைவரால் அல்லது குழுத்தலைவரால் அல்லது இதன்பொருட்டு அத்தகைய மேலாண்மைக்குழுவால் எழுத்துவடிவில் உறுதிபடுத்தி அதிகாரமளிக்கப் படக்கூடிய மேலாண்மைக் குழுவின் வேறு உறுப்பினர் எவராலும் கையொப்பமிட்டு உறுதிச் சான்றளிக்கப்படுதல் வேண்டும்.

**44. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.–** இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதன்படியும் நல்லெண்ணத்தில் செய்யப்பட்டுள்ள அல்லது செய்யக் கருதப்பட்டுள்ள செயல் எதற்காகவும், நபர் எவருக்கும் எதிராக, உரிமையியல் வழக்கோ, குற்றவியல் வழக்கோ அல்லது வேறு சட்ட நடவடிக்கை எதுவுமோ தொடுக்கப்படுதல் கூடாது.

**45. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.–** இச்சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக, அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதாகவோ உகந்ததாகவோ தமக்குத் தோன்றுகிற இச்சட்டத்திற்கு முரணாக இல்லாத வகைமுறைகளைச் செய்யலாம்:

**வரம்புரையாக:** இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டாண்டுக் காலஅளவு முடிவடைந்த பிறகு அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

**46. ஆணைகளைப் பிறப்பிப்பதற்கான அரசின் அதிகாரம்.–** (1) அரசு பொதுநலனைக் கருதி ஆணை

வாயிலாக, அந்த ஆணையில் குறித்துரைக்கப்பட்ட நிகழ்வு எதிலும், தகுதிவாய்ந்த அதிகாரிக்கு இச்சட்டத்தின்படி விசாரணை ஒன்றைச் செய்யும்படியோ அல்லது உரிய நடவடிக்கை எடுக்கும்படியோ உத்தரவிடலாம். அந்த தகுதி வாய்ந்த அதிகாரி, அவ்வாறு செய்த விசாரணை அல்லது எடுத்த நடவடிக்கைகளின் விளைவு குறித்து வகுத்துரைக்கப்படும் காலஅளவிற்குள் அரசுக்கு அறிக்கை அனுப்புதல் வேண்டும்.

(2) அரசானது, தகுதிவாய்ந்த அதிகாரியின் அல்லது குடியானவர்களின் சங்கத்தின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் தொடர்பான விவரம் எதனையும் பொறுத்த அளவில், தாம் தேவை எனக் கருதும், பொதுத்தன்மை உடைய ஆணைகளையும் பணிப்புரைகளையும் பிறப்பிக்கலாம்; அதன் பேரில் தகுதிவாய்ந்த அதிகாரியோ அல்லது குடியானவர்கள் சங்கமோ அத்தகைய ஆணைகளுக்கும் பணிப்புரைகளுக்கும் செயல்விளைவு அளித்தல் வேண்டும்.

**47. ஆணையரால் செய்யப்படும் மேலாய்வு.–** ஆணையர், தாமாகவோ அல்லது விண்ணப்பத்தின் பேரிலோ, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட முடிவு, ஆணை அல்லது வேறு நடவடிக்கைகளைப் பொறுத்த, முடிவு அல்லது ஆணை எதனின் தகுதி, சட்ட முறைமை அல்லது பொருத்தம் உடைமை குறித்து, தாம் தெளிவுறக் காண்பதற்காகக் குடியானவர் சங்கத்தின் மேலாண்மைக்கு அல்லது உச்சநிலைக்குழு எதனின் பதிவுருக்களைத் தருவித்துப் பரிசீலனை செய்யலாம். அத்தகைய முடிவு, ஆணை அல்லது நடவடிக்கைகள் மாற்றம் செய்யப்பட வேண்டும், நீக்கம் செய்யப்பட வேண்டும் அல்லது எதிர்மாறாக்கப்பட வேண்டும் அல்லது மறுபரிசீலனைக்காகத் திருப்பி அனுப்பப்படுதல் வேண்டும்

என்று ஆணையருக்குத் தோன்றினால் அவர் அதற்கு உரிய ஆணைகளைப் பிறப்பிக்கலாம்:

**வரம்புரை:** ஆணையர், பாதிக்கப்படக்கூடிய நபருக்குத் தம் தரப்பினை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பு ஒன்றினை வழங்கினாலன்றி நபர் எவருக்கும் எதிராகப் பாதகமான ஆணை எதனையும் பிறப்பித்தல் கூடாது.

**48. மற்றச் சட்டங்களின் செயற்பாடு பாதிக்கப்படுதல் கூடாது.–** இச்சட்டத்தின் வகைமுறைகள் அப்போதைக்கு நடைமுறையில் இருந்து வருகின்ற வேறு சட்டங்கள் எதற்கும் கூடுதலாக இருத்தல் வேண்டுமேயன்றி அவற்றுக்குப் பாதகமாக இருத்தல் கூடாது.

**49. காப்புரை.–** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், நடைமுறையிலுள்ள சட்டம் எதன்படியும், சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி, நகராட்சி அல்லது மாநகராட்சி எதனின் உரிமைகளையும் அவற்றில் ஒப்படைக்கப்பட்டுள்ள சொத்துக்களையும் பாதிக்கக் கூடாது.

**50. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.–** (1) அரசு, இந்தச்சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றில் எதையுமோ நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி அல்லது ஆணை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுதல் வேண்டும். அது அவ்வாறு வைக்கப்பட்ட அக்கூட்டத்தொடர் முடிவடையும் முன்னரோ அல்லது அதற்கு அடுத்த கூட்டத்தொடரிலோ சட்டமன்றப் பேரவை, அந்த விதி அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதையும் செய்யுமானால் அல்லது சட்டமன்றப் பேரவை, அவ்வாறு அவ்விதி அல்லது ஆணை செய்யப்படுதல் கூடாது என முடிவு செய்யுமானால், அதன் பின்பு, அந்த விதி அல்லது ஆணை அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில்

மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நடைமுறைக்கே வராது போதல் வேண்டும். எனினும் அத்தகைய மாறுதல் அல்லது நீக்கம் எதுவும், அந்த விதி அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்டுள்ள எதனுடைய செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.